International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவர்களின் முருகன் வழிபாடு

**ந. தேவிகா**
முனைவர் பட்டம் ஆய்வாளர்

**சு. வடிவாம்பிகை**
உதவி பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், நெறியாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, அரசு கலைக் கல்லூரி, பு. முட்லூர், சிதம்பரம்,

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க காலத்தில் கடவுளுக்கு ஆடுகின்ற ஆடல்களும் ஒன்றாகிய குரவையாடல் முருகன் வழிபாட்டோடு தொடர்புடையதாகும்.மேலும் சிலப்பதிகாரத்தில் தெய்வங்களாக முருகன் போற்றப்படுகிறான். குறிப்பாக குன்றக்குரவைக் காதையில் முருகனுக்காகக் குன்றக்குரவர்கள் வழிபாடு செய்து முருகனை வழிபடுகின்றனர். குன்றக்குரவர்கள் முருகனை வழிபட்டு ஆடிய கூத்துக்களையும், முருகனின் சிறப்புகளையும் போற்றி புகழ்ந்து அதனால் ஏற்பட்ட நன்மைகளையும், முருகன் குடிக்கொண்டிருந்த தலங்கள் முருகனை மகிழ்விக்க மக்கள் ஆடிய குரவைக் கூத்து, மற்றும் வெறிக்கூத்து, குறமகள் வழிபாடு பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முதன்மைச் சொற்கள்**

சிலப்பதிகாரம், குன்றக்குரவர், வெறியாடல், வழிபாடு, நீராடல், குரவைக் கூத்து, தலங்கள்,.

**முன்னுரை**

சிலப்பதிகாரத்தில் உள்ள வஞ்சிக் காண்டத்தின் 24 ஆவது காதையாகிய குன்றக்குரவைக்காதை முருகனின் பெருமையும், வள்ளி குறவர் வாழ்வையும், கூறி அவரைப் போற்றி ஆடும் ஒரு தெய்வீக நடனமாக குன்றக்குரவர் சித்தரிக்கின்றன. இந்தக் குன்றக்குரவர்கள் மலைப்பகுதியில் வாழும் குரவர்கள் முருகனை வணங்கிப் பாடி ஆடும் ஒரு கூத்து வடிவம் ஆகும். இவை சிலப்பதிகாரத்தில் வஞ்சிக் காண்டத்தில் கண்ணகி தெய்வமாக மாறிய பிறகு அவளுக்காக அவளுடைய பத்தினி தன்மையைப் புகழ்ந்து பாடப்படும் பாடலாக குறிப்பிடப்படுகிறது. கண்ணகி தன் பத்தினித் தன்மையை நிலைநாட்ட பல தெய்வங்களின் உதவியை நாடினாள் அதன் விளைவாக மலைக்குரவர்கள் கண்ணகியையே தெய்வமாக்கி, அவளுக்காக ஆடும் நடனமாக குன்றக்குரவை விளங்குகிறது.

**சிலப்பதிகாரத்தில் முருகன்:**

சரவணப் பொய்கையில் தாய்மார் அறுவரிடம் பாலருந்திய செய்தியை சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் "ஆலமர் செல்வனின் புதல்வன்" என்ற செய்தியும் காணப்படுகிறது. சமணக் காப்பியமாக கருதப்படுகின்ற சிலப்பதிகாரத்தில் முருகனின் பிறப்பு பற்றிய புராண செய்திகள் இடம் பெற்றுள்ளமையை அறிய முடிகிறது. புராணக் கருத்துக்கள் சிலப்பதிகார ஆசிரியர் காலத்தில் மிக பரவலாக சமுதாயத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்புகளால் அறியலாம்.

> **"சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா அறுவர்,**
> **திருமுலைப்பா லுண்டான் திக்கைவே லன்றே"[1]**
> **"ஆலமர் செல்வனின் புதல்வன் வருவாயில்"[2]**

மணிமேகலையும் ஆலமர் செல்வனின் புதல்வனாக முருகன் குறிப்பிட்டுள்ளான். புராணக் குறிப்புகள் மணிமேகலிலும் இடம் பெற்றிருந்தமையைக் காண முடிகிறது.

முருகன் தாரகனை வென்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் உணர்த்தாவிடினும் அவனுடைய மாயமலையாகிய கிரவுஞ்சமலை குருகு பெயர்க்குன்றம் என்ற பெயரால் குறிக்கப் பட்டுள்ளது. தெய்வம் குன்றம் என்று பரிபாடல் குறிக்கிறது. இக் காரணத்தினால் முருகன் தன் வேலால் இக்குன்றத்தை அழித்திருக்கலாம். முருகன் குன்றெறிந்த செய்தியைத் திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், மணிமே கலை, புறப்பொருள் வெண்பாமாலை, முதலான பல நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

### குன்றக்குரவையில் முருகன் சிறப்புகள்:

கடலின் நடுவே மாமரமாக நின்ற சூரபத்மனை அழித்த வரலாற்று செய்தியை சிலப்பதிகாரமும், மணிமேகலையும் உணர்த்துகிறது. சிறப்புகளை அறிய முடிகிறது. கடலின் நடுவே இருந்த சூரனை வீழ்த்தி வெற்றி வேலினை உடையவன் முருகன் விளங்குகின்றமையைச் சிலப்பதிகாரம் முலம் அறிய முடிகிறது.

**"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்,**
**ஏரகமு நீங்கா இறைவன் கை வேலன்றே,**
**பாரிரும் பௌவத்தி னுள்புக்குப் பண்பொருநாள்,**
**சூர்மா தடித்த சுடரிலைய வெள்வேலே,"[3]**

வேல் என்பது வெற்றிக்கு அடையாளமாகத் திகழ்வது சூரனை வென்ற குறிப்பினையே உணர்த்தும் வகையில் இவ்வேல் அடையாளமாக வைக்கப்பட்டு முதலில் வழங்கப் பெற்றிருக்க வேண்டும். செங்கோடு, வெண்குன்றம், ஏரகம், என்னும் இடங்களில் முருகனுக்குக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் குறிப்பிட்டு உள்ள நான்கு இடங்களிலும் இறைவன் நீங்காமல் தங்கியுள்ளான் என்பதனை, முருகனை இறைவன் என்னும் பெயரால் இளங்கோவடிகள் குறிப்பிடப் பட்டுள்ளதைக் காணலாம்.

சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர்கள் வெண் குன்றுக்கு சுவாமிமலை என விளக்கத்தினை அளிக்கின்றார். முருகன் குன்றமர் செல்வனாக இருந்தமையைப் சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களும் சுட்டுகின்றனர். பரிபாடல் பரங் குன்றையும் முருகனையும் இணைத்து பேசுவ தால் இதை அறியமுடிகிறது. திருமுருகாற்றுப்படை குறிப்பாக ஐந்து மலைகளையும் பிற எல்லாக் குன்றுகளையும் முருகன் கோயில் கொள்ளும் இடங்களாகக் குறித்துள்ளமையே நாம் அறிந்த ஒன்றே. ஆனால் சிலப்பதிகாரத்தில் வெண்குன்று முதலாகக் குறிப்பிடப்படுகின்ற இடங்களும் குன்று களாகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்[4]**
**கோழிச் சேவற் கொடியோன் தோட்டமும்[5]**

ஆறுமுகத்தையும் செய்ய நிறத்தையுடைய அழகு மிக்க விளங்குகின்ற முருகவேளின் கோயிலும், கோழியின் சேவலாகிய கொடியினையுடைய முருகனது கோயிலும் என்று சிலப்பதிகாரம் பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

### குன்றக்குரவர் முருகனை வாழ்த்தி பாடுதல்:

குரவைக் கூத்தின் முதல் பகுதி முருகனை வாழ்த்திப் பாடுவதாக அமைந்துள்ளது.

**"இறைவனை நல்லா யிதுநகையா கின்றே,**
**கறிவளர் தண் சிலம்பன் செய்த நோய் தீர்க்க,**
**அறியாள்மற் றன்னை மலர்கடம்ப ணன்றே,**
**வெறியாடறான் விரும்பி வேலன் உரு கொன்றான்[6]**

என்ற பாடலானது அறத்தொடு நிற்றல் எனும் துறையில் வெறியாடல் நிகழ்ச்சியினை கூறுகின்றது. குன்றக்குரவையின் இறுதி பகுதியில் தலைவனோடு மணவிழா நேர்ந்ததை எண்ணித் தலைவி மகிழ்ச்சி கொள்வதாக அமைகின்றது.

### முருகனை வழிபடும் மரபு

கடவுளை வழிபடுவதால் எண்ணிய செயல்கள் கைகூடும் எனும் எண்ணம் மக்களிடையே இன்றளவும் காணப்படுகின்றது.

**"குன்றக்குரவன் கடவுட் பேணி இரந்தனன்,**
**பெற்ற என்வளைக் குறமகள்"[7]** (ஐங்குறுநூறு)

என்ற ஐங்குறுநூறு மூலம் மக்கள் மழை வேண்டியும், தொழில் சிறக்கவும், இருந்ததை அறியலாம்.இதனையே

**"மலை மறை கடவுள் குலமுதல் வழுத்தி"[8]**

என்ற ஐங்குறுநூறு பாடல் வரியும் விளக்குகின்றது. மக்கள் கடவுளை பேணிய நிலையிலிருந்து நல்ல நீர் நிலைகளில் மூழ்கி எழுந்தால் பயன்பெறலாம் என்னும் எண்ணமும் வளர்ந்துள்ளதை சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது. இவ்வாறு இலக்கியங்களில் இடம் பெற்ற முருகன் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் இருவேறு நிலைகளில் காணப் படுகின்றது. முருகனை களவுத் தெய்வமாகவும், கொற்றவை என்னும் தாய் தெய்வத்தின் மகனாகவும், குறக்குல பெண்ணான வள்ளியை மணந்தவனாகவும், தமிழ் மரபு சுட்டுகிறது. முருகன் பிறப்பு குறித்த கதைகள் முன் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெறாத நிலையில் பரிபாடலில் இடம் பெற்ற முருகன் சிவ மைந்தனாக மாறியதைக் குறிப்பிடுகிறது. இச்செய்தி முற்றிலும் ஆரியமயமாகிப் போன காலத்தைக் காட்டுகிறது.

**குன்றக் குரவர்கள் கண்ணகியைத் தெய்வமாக வழிபடல்**

திணைப்புனங்களில் காவல் காக்கும் குறமகளிர் ஒரு முலையிழந்த வேங்கை மரநிழலில் நிற்கும் கண்ணகியைப் பார்த்து என் குலதெய்வமான வள்ளியைப் போல விளங்குகின்றார் நீவிர் யாரோ என வினவுகின்றமையை சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் பாடல் அடிகள் கூறுகின்றன.

**"இவள் போலும் நம் குலக்கோர்,**
**இருந்தெய்வம் இல்லை யாதலின்,**
**சிறுகுடியீரே! சிறுகுடியீரே,**
**தெய்வம் கொள்ளுமின் சிறுகுடியீரே,**[9]

எனக் கண்ணகி போல் ஒரு பெரிய தெய்வம் தம் குலத்துக்கு வேறு இல்லை எனக் கூறி அனைவரையும் கண்ணகியை வழிபடுமாறு வேண்டுகின்றன.

குறவர் குடியினர் தங்கள் குலதெய்வமான வள்ளியைக் கொண்ட நிலையினைப் போல பத்தினி வழிபாட்டை வெகுசன வழிபாடாக மாற்ற நினைத்த இளங்கோவடிகள் இக்கூற்றைக் குரவர்கள் கூற்றாகவே வெளிப்படுத்தியிருப்பது அவரின் ஆளுமையை வெளிப்படுத்துகிறது. கண்ணகியைத் தெய்வமாக்கிய நிலை பத்தினி வழிபாடாக இருப்பினும் வள்ளி முருகன் இணை வாய்மொழி மரபில் என்றும் வாழும் மரபாக உள்ளன.

**குன்றக் குரவர்கள் முருகனுக்கு ஆடிய கூத்து**

சங்ககால ஆட்டங்களில் ஒன்றாகிய குரவை யாடல் முருகன் வழிபாட்டோடு தொடர்பு டையதாக காணப்படுகிறது. குரவை என்றது காமும் வென்றியும் பொருளாகக் குரவை செயல் பாட்டாக ஏழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின் மரேனும் கையினைக் கோத்தாடுவது என்று அடியார்க்கு நல்லார் விளக்கம் தந்துள்ளார்.

**"குரவை என்பது ஏழுவர் மங்கையர்,**
**செந்நிலை மண்டலக் கடகக் கைகோத்,**
**தந்நிலைக் கொட்பறின் றாடலாகும்",**[10]

குரவையாட்டம் ஏழுவர் மங்கையரால் ஆடப் பட்டமையே விளக்குகிறது. சங்க இலக்கியங் களில் குரவையாட்டம் மூன்று நிலைகளில் காணப்படுகிறது. ஒன்று சினமிக்க வீரர் ஆடும் குரவையாட்டம், இரண்டாவது எந்த நோக்கமும் இன்றிக் குரவையாடி மகிழ்வது, மூன்றாவது கடம்ப மலரைச் சூடி முருகனைத் தன் மெய்யின் கண்ணே நிறுத்தும்போது மகளிர் தம்முள் தழுவி கைக்கோர்த்துக் குரவை ஆடியதை மதுரைக்காஞ்சி தெளிவுபடுத்துகிறது.

நீயும் என் காதலனும் புணர இம்மலையுரை தெய்வம் மனம் மகிழும் படியாக மகிழ்ந்து குரவையைக் கைகோர்த்து ஆடுவதற்கு அக்குரவைக் கூத்தினின்று கொடுநிலைச் செய்யுளை நீ பாடுக என்று தோழி தலைவியும் கூறுவதாகக் கலித்தொகைப் பாடல் கூறுகிறது. சிலப்பதிகாரத்து குன்றக்குரவை மிகத் தெளிவாக முருக வழிபாட்டில் குரவையாடல் இடம்பெறும் பாங்கை விளக்குகிறது.

மனதில் உள்ள இன்பங்களைப் பலரும் அறிந்து அனுபவிக்க செய்வன கூத்துகளே. இக்கூத்துக் களையும் சிலப்பதிகாரத்தில் வாயிலாக அறியலாம். கூத்தினை மக்கள் கண்களினால் கண்டு செவினால் கேட்கும் மகிழ்ச்சியடைந்தனர் என்பதனை.

**கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணரும்,**
**உணர்வுடை மாந்தர்க்கல்லது**[11]

(தொல்: மெய்ப்பாட்டியல்)

என தொல்காப்பியம் குறிப்பிடுவதால் அறியலாம்.

மட்டற்ற மகிழ்ச்சிக் கூத்தாக வெளிப்படுகின்றது. கூத்துக்களால் தெய்வங்களையும் மகிழச் செய்யலாம் என்பது திண்ணம் தெய்வங்களும் கூத்தாடியதாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. திருச்சிற்றம்பலத்தில் நடராசர் ஆடியது ஆனந்த கூத்தாகும். அவர் குமரராகிய முருகப்பெருமான் கிடையில் குடைக் கூத்தனையும் துடிக்கூத்தனை யும் ஆடியுள்ளார். முருகப் பெருமானை மகிழ்வூட்டுவதற்கு மக்கள் குரவைக்கூத்து, வெறிக்கூத்து, வள்ளிக்கூத்து, போன்றவற்றை ஆடி உள்ளன. இதன் சிறப்பை சிலப்பதிகாரத் தின் குன்றக்குறவை எடுத்தியம்புகின்றது.

முருகன் முதலான தெய்வங்கள் தம் எதிரிகளான அவுணர், அரக்கர், முதலானவர் களை அழித்த செய்திகளை பாடி ஆடுவதாக இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

**முருகன் ஆடிய கூத்துக்கள் - குடைக்கூத்து**

பதினொரு வகை ஆடல்களுள் வென்றிக் கூத்து, வசைக்கூத்து, விநோதக்கூத்து, என்ற மூன்றனுள் அடங்கும். அவற்றுள் குடைக்கூத்து வென்றிக் கூத்தின் வகையுள் அடங்கும். வென்றிக் கூத்தாவது மாற்றம் ஒழுக்கமும் மன்னன் உயர்ச்சியும் மேம்படக் கூறுவது. போர்க்களத்தில் ஆவணர்கள் அனைவரும் முருகனும் அவன் சேனைத்தலைவர்களும் செய்யும் போருக்கு ஆற்றாமல் தங்கள் கையில் இருந்த படைகளை யெல்லாம் போட்டுவிட்டுச் சேர்ந்து நின்றார்கள். அதை கண்ட முருகன் வெற்றிக் களிப்பு ஏற்பட்டு வீரக்கூத்து ஆடுகின்றான். தன் கையில் உள்ள குடையை ஒருமுக யாழினியாக முன்னே சாய்த்துக் கொண்டு தன் உருவை மறைத்துக் கூத்தாடுகிறார். குடையை சாய்த்து ஆடும் குடை கூத்திருக்கு நான்கு உறுப்பு உண்டு இதனை சிலப்பதிகாரம்.

**"படைவீழ்த்தவுணர் பையும் எய்தக்,**
**குடைவீழ்த் தவர்முன் ஆடிய குடையும்",[12]**
**"ஆறுமுகத்தோன் ஆடல் குடைமற்று அதற்குப்,**
**பெறும் உறுப்பு நான்காம் எனல்",[13]**
என்று கூறுகின்றது.

**துடிக்கூத்து**

துடிக்கூத்தும் முருகனுடைய கூத்தாகும். கடலுள் சூரனை முருகன் போரிட்டு அழித்த கதையே துடிக்கூத்தாகும். சூரன் முருகனுடைய போருக்கு ஆற்றாது வஞ்சனையால் மறைந்து சென்று கடல் நடுவில் மாமரமாய் நின்றான். அவனுடைய வஞ்சனையால் மறைந்து சென்று கடல் நடுவில் மாமரமாக நின்றான் அவனுடைய வஞ்சக உருவை அறிந்த முருகன் கடல்கலங்கும் வண்ணம் கடலுக்குள் சென்று வேலினை ஏவி மாமரத்தை துண்டாக்கி வெற்றிக் கண்டார். வெற்றிச் சிறப்பு தோன்ற கடலைகளையே திரையாகக் கொண்டு கடலையே அரங்கமாக்கி துடிகொட்டி ஆடினாள். இக்கூத்து ஐந்து உறுப்புகளை உடையது இதனை,

**"மாக்கடல் நடுவண்,**
**நீர்த்திரை அரங்கத்து நிகர்த்து முன்னின்ற,**
**சூர்த்திறங் கடந்தோன் ஆடிய துடியும்,"[14]**
**"துணியாடல் வேல்முருகன் ஆடல் அதனுக்கு,**
**ஓடியா உறுப்பு ஓர் ஐந்தாம்",[15]**
எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

**குன்றக்குரவர்கள் முருகனுக்கு ஆடிய கூத்து**

**குரவைக் குத்து**

குன்ற குரவர்கள் முருகன் மகிழ்மாறு மகிழ்ச்சியுடன் கூத்தாடியுள்ளனர். அதனால் வேண்டிய வரங்களை அருளுவர் என்னும் நம்பிக்கையும் இருந்தது. ஒன்பதின்மரேனும் கைகோர்த்து ஆடும் ஒருவகைக் கூத்து. இக்கூத்தின் குறிஞ்சி நிலத்து மக்களாகிய குறத்தியர்கள் ஆடினார்கள். முருகனை நோக்கி குறத்தியர் ஆடிய கூத்து குன்றக்குரவை எனப்படும். தம் சேரிக்கு வரும் நலத்தீங்கு களை முன்னர் அறிவிக்கும் உற்பாதங்களுக்குச் சாந்தியாக ஆடப்பெறுவது என்பர் அடியார்க்கு நல்லார்.

**குன்றக் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,**
**..........குரவை அயர்[16]**
என்பதை என்பதனை திருமுருகாற்றுப்படை மூலம் அறியலாம்.

குரவைக்கூத்தில் 'தலைக்கை தருதல்' ஒரு வழக்காகும். தலைவன் ஆடும் மகளிரின் கைகளைப் பற்றி தழுவுதல் தலைக்கை தருதல் எனப்படும். இதனை திருமுருகாற்றுப்படை மூலம் அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் கோவலனை இழந்த கண்ணகி அவன் சொல்லின் படி திருக்செங்குன்றில் வேங்கை மர நிழலில் கோவலனோடு வானவூர்தி ஏறினாள். அதை கண்ட குறவர்கள் கண்ணகியைக் குலதெய்வ மாகக் கருதி மலைவளம் சிறக்க குரவை யாடினார்கள். அவ்வாறு ஆடும்போது முருகன் மாமரத்தினைத் தடித்தது. திருச்செந்தூர், திருச்செங்கோடு, சுவாமிமலை, ஏரகம், தலத்தின் சிறப்பு, முருகனது பிணைமுகம், பன்னிரு கைகளை உடைய முருகனின் அழகின் சிறப்பு, வேலின் சிறப்பு, கார்த்திகை பெண்களின் அறுவரின் முலைப்பாலை உண்ட நிகழ்ச்சி, ஆகிய செய்திகளை குன்றக்குறவர்கள் போற்றிப் பாடி குரவையாடுவார்கள் என்பதனை குன்றக்குரவையின் மூலம் அறியலாம்.

**வெறிக்குத்து**

வெறிக்கூத்து என்பது தெய்வம் ஏறியாடுகின்ற ஆவேசக்கூத்து எனப் பொருள்படும். வேலன் கையில் வேலெந்தி செவ்வாடை உடுத்தி, செவ்வணி அணிந்து, சந்தனம்ப்பூசி, தொண்டகப் பறை ஒலிக்க குறிஞ்சிப்பண்பாடி ஆடுவான். இவன் வேல் ஏந்தி ஆடுவதால் வேலன் என்று அழைக்கப்படுகிறான். இது மகளிர்க்கு அணங்கு ஏற்பட்டதால் செவிலி அல்லது நற்றாய் வேண்டுகோளின்படி ஆடப்பெறுவது இதனை,

**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்,**
**வெறியாட்டு அயர்ந்த காந்தலும்.[17]**
என்று தொல்காப்பியம் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். மேலும் சிலப்பதிகாரத்தில் குன்றக்குரவையில்.

**வெறிக்கமழ் வைற்ப்பன் நோய் தீர்க்க வரும் வேலன்,**
**வேலன் மடவன் அவனினும் தான் மடவன்,**
**ஆலமர் செல்வன் புதல்வன் வருமாயின்.,[18]**
**குறமகள் அவன் எம் குலமகள் அவளோடும்,**
**ஆறுமுக ஒருவ நின் அடிப்பினை தொழுதேம்,[19]** என்று தோழி அறத்தொடு நிற்றல் துறையில் வள்ளியை யும், முருகனையும், வழிபட்ட நிகழ்வை காணலாம். வெறியாடல் செய்திகளை ஐங்குறு நூற்றில் 'வெறிபத்து' பகுதியில் அமைந்துள்ள பத்துப் பாடல்களில் காணலாம். வெறியாடலைப் பற்றிய சிறப்பித்துப் பாடியதால் ஒரு பெண்பாற் புலவரை 'வெறிபாடிய காமக் கன்னியர்' என அழைக்கப்பட்டார்.

**வள்ளிக்கூத்து**

குற மகள் வள்ளி வேடம் புனைந்து ஆடுகின்ற கூத்தாகலின் வள்ளிக்கூத்து எனப்படும் தொல்காப்பியம் புறத்திணையில்,

'வாடா வள்ளி வயவரந்திய ஓடாக்கழல்நிலை' என்பதற்கு இளம்புரனார் உரையில் வள்ளி

என்பது ஒரு கூத்து என்பர். அஃது இழிந்தோர் கானும் கூத்து" இது அது பெண்பாற்கு பெருவரவிற்று என்று கூறுவர். இதனால் பெண்களே பெருவழக்காக வள்ளிக்கூத்தை ஆடுவதால் இதனால் கூத்து ஆடுபவர் பெரு விருப்பத்துடன் இருந்து கண்டு களிப்பார் என அறியலாம். வள்ளிக் கூத்து பற்றி அடியார்க்கு நல்லார் ஒரு பழைய வெண்பாவில்,

> **மண்டமர் அட்ட மறவர் குழாத்திடைக்,**
> **கண்ட முருகனும் கண்காளித்தான் -பண்டே,**
> **குறமகள் வள்ளி தன் கோலங்கொண்டு ஆடப்,**
> **பிறமகள் நோற்றான் பெரிது[20]**

என்பதால் முருகனே கண்டு களிக்கும்படி வள்ளியின் கோலம் தாங்கி ஒரு பெண் ஆடுவாள் சாலினி தெய்வமுற்று ஆடிய கோலத்தை கொற்றவை, ஐயை, பாய்கலைப் பாவை கோலங்கள் என்று வள்ளிக்கூத்தை சுட்டுகிறது. இதனால் பெற்ற பேறு என்று மக்கள் நம்பிக்கையே அறியலாம்.

### குறமகள் வெறியாடல்

குறவர் குலத்தைச் சார்ந்த குறப்பெண் முருகனை வழிப்பட்டு வெறியாடல் மேற் கொண்டதை, சங்க இலக்கிய பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது. குறவர் குலத்தைச் சார்ந்த பெண் வெறியாடும் இடத்தில் முருகனுக்குரிய கோழிக் கொடியை நட்டு. வெண்சிறுகடுகை அப்பினால். வழிபடுவதற்கு மூலமந்திரத்தைக் கூறி மலர்களை தூவி கைகூப்பி வணங்கி வேறுபட்ட நிறங்களை உடைய ஆடைகளை உடுத்தி சிவந்த நூலை காப்பாக கட்டிக்கொண்டு வெண்பொறியை தூவி வலிமை வாய்ந்த ஆட்டுக்கிடாய் குருதியோடு வெள்ளரிசையைத் கலந்து பலியாக வைத்தாள். சந்தனத்தைத் தெளித்து குளிர்ச்சி நிறைந்த செவ்வரளி மாலையுடன் பிற மாலைகளையும் பந்தலில் தொங்கவிட்டு குறப்பெண் மலைப் பக்கத்தில் உள்ள ஊர்களை 'பசியும் பிணியும் பகையும் நீக்குக' என்று வாழ்த்தினார். மணம் கமழக்கூடிய பொருட்களால் புகை ஏற்படுத்தி குறிஞ்சிநிலத்தின் குறிஞ்சிப்பண்ணைப் பாடி அருவி ஓசையைப் போல இசைக் கருவிகளும் முழங்கப்பட்டுச் சிவந்த நிறத்தை உடைய பல பூக்களை விட்டு ரத்தத்தோடு கலந்த திணை அரிசியை பரப்பி வைத்து இறைவன் இவன் என்று பார்ப்பவர்கள் அஞ்சும் படியும் முருகப் பெருமான் அந்த இடத்திற்கு வரும்படியாக நினைத்து வழிபட்டதை அறிய முடிகிறது. வேலன் மட்டுமல்லாமல் குறமகளும் வெறியாட்டம் நிகழ்த்தியதை அறியலாம்.

### முருகனும் வள்ளியும்

முருகன் குறித்த கதைகள் எதுவும் வாய்மொழி மரபில் இடம்பறவில்லை. ஆனால் வள்ளியோடு இணைந்துப் பேசப்படும் நிலையை வாய்மொழி இலக்கியங்கள் பரவலாக சுட்டுகின்றன. தமிழ் பண்பாட்டை பிரதிபலிக்கும் வள்ளி முருகன் பற்றிய செய்திகளை சங்க பாடல்கள் ஓரளவு பிரதிபலிக்கும் வகையில் வள்ளி எனும் சொல் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது.

> **கொடிநிலை கந்தழி வள்ளி நின்ற,**
> **வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்,**
> **கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே[21]**

என்னும் நூற்பாவில் வள்ளி பற்றிய குறிப்புகள் கிடைக்கிறது. இதில் கொடி நிலை, கந்தழி, வள்ளி, ஆகிய மூன்று முருக வழிபாட்டோடு தொடர்புடையது. நற்றிணைப் பாடலடியே முருகனையும் வள்ளியையும் இணைத்துப் பேசும் முதல் குறிப்பெண் கொள்ளலாம்.

**முருகு புணர்ந்து இயன்ற வள்ளிபோல[22]**

என்னும் பாடலடி முருகனோடு வள்ளி உடன் போனமையைக் குறிப்பிடுகிறது. இவ்வாறு ஒரு திணை சார்ந்த முருகனும் வள்ளியும் தமிழ் இலக்கிய மரபில் இணைந்தே பேசப்படுகின்றன. முருகன் என்னும் கடவுள் கருத்து. பழங்கால குறவர், எயினர், தாலவர், போன்ற குறிஞ்சி நில மக்கள் புஞ்செய் அல்லது நஞ்செய் பயிர்த் தொழிலை மேற்கொண்ட ஆரம்பகாலத்தில் தோன்றியதாகும். இதைபோலவே வள்ளி தெய்வமாக்கப்பட்டதை ஏராளமாகக் கிடைத்த வள்ளிக்கிழங்கை உணவு சேகரிப்போர் செழிப்பிற்கு அறிகுறியாகக் குலகுறியாக கொண்டிருக்கலாம். காலப் போக்கில் வள்ளிக் கிழங்கு வள்ளி தெய்வமாக மாற்றம் அடைந்ததை அறியமுடிகிறது.

வீரம், அழகு, என்னும் கருத்துக்களின் படியில் தோன்றிய முருகனும் செழிப்பிலிருந்து தோன்றிய வள்ளியும் குறிஞ்சி நில மக்களின் தெய்வமாகிப் போனதையும் இவர்கள் இருவரும் காதலர் களாகிப் போனதையும் சான்றுகள் மெய்ப்பிக் கின்றன. முருகனை முற்றிலும் ஸ்கந்தனின் பிறப்போடு இணைத்துப் பேசும் பரிபாடலும் முருகன் வள்ளி பற்றிய மரபு தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது இதனை,

> **குறப்பிணாக் கொடியைக் கூடியோய்,**
> **ஆறுமுகத் தாறிரு நோயால் வென்றி,**
> **நறுமலர் வள்ளிப் பூநயந் நோயே,[23]**

என்னும் பரிபாடல் சுட்டுகிறது.

ஆரியக்கூறுகள் இணைந்த நிலையில் முருகன் வள்ளிக்கு முன்பு தேவசேனையைக் கற்பு மணம் புரிந்து கொண்டான் எனப் பரிபாடலில் அறியலாம்.

திணை மரபில் கால் கொண்ட முருகனுக்கு வள்ளியே துணையானவள், முதன்மையானவள்,

என்பதை பல நாட்டுபுறப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன. வள்ளியின் பிறப்பு,

**வள்ளிக் கொடியருகே,**
**மான்கன்று போட்ட தென்று,**
**கானக் குறவரெல்லாம்,**
**காண்டெடுத்து மண்துடைத்து,**
**மண்துடைத்து மடியில் வைத்து,**
**வள்ளியென்றே பேருமிட்டு,**
**வடிவேல் துணை யாமென்று,**
**வளர்ந்தார் வனந்தனிலே,**[24]

என நாட்டுப்புற பாடலில் இடம்பெற்றுள்ளது என்பதனை காணலாம். வள்ளி தமிழ் மரபில் நெடுங்காலந்தொட்டே முருகனோடு இணைத்துப் பேசப்பட்டமையைத் தெளிவுபடுத்துகிறது. முருகன் வள்ளி வழிபாட்டு நிலை குன்றக்குரவை யில் இடம்பெற்றிருப்பினும் வள்ளி வழிபாடு அவனைத் தெய்வமாகக் கொண்ட நிலை சிலப்பதிகாரத்தில் அறியலாம்.

### முடிவுரை

சங்க கால இலக்கியங்களில் குரவையாடல் முருகன் வழிபாட்டோடு தொடர்புடையதாக உள்ளது. மேலும் சிலப்பதிகாரத்தில் உள்ள வஞ்சிக் காண்டத்தில் 24வது காதையில் குன்றக் குரவையில் முருகனுக்கு குரவர்கள் கூத்து ஆடி முருகனை வழிபட்ட செய்தியினை இக்கட்டுரை எடுத்துக் கூறுகின்றது. அவற்றில் முருகன் வழிபாடுகளையும், முருகனுக்காக குன்றக்குறவர் கள் வழிபட்ட செய்திகளையும், முருகனுக்காக மக்கள் ஆடிய கூத்துகளையும், தாய்மார்கள் அறுவரிடம் பால் அருந்தியபுராணச் செய்திகளை யும், முருகன் ஆடிய கூத்துக்களையும், முருகன் தங்கி இருந்த தலங்களையும், முருகன் வெற்றிச் சிறப்புகளையும், அவனது தோற்ற அமைப்பை யும், குறமகள் வெறியாடல் நிகழ்த்திய செய்தி களையும், வள்ளி முருகன் காதல் வாழ்வையும், குன்றக்குறவர் காதையின் வழி அறிய முடிகின்றது.

### சான்றெண் விளக்கம்

1. சிலம்பு:3:24;9,
2. மேலது:3:24;12,
3. சிலம்பு:குன்:குரவை;7,
4. மேலது:பா:170,
5. மேலது:பா;10,
6. மேலது:24;15,
7. ஐங்குறு:253,
8. மேலது:259,
9. சிலம்பு:24:9-12,
10. மேலது:3:24,
11. தொல்:மெய்ப்பாட்டியல்),
12. சிலம்பு: கடலோடு காதை:6:52-53,
13. மேலது:அரங்கேற்று காதை:3:14-15,
14. மேலது:கடலோடு காதை:6:49-51,
15. மேலது:3:14-15,
16. திருமுருகு:196,
17. தொல்:புறத்:5,
18. சிலம்பு:குன்ற:24;12,
19. மேலது:குன்ற:24:14-17,
20. தொல்:புறத்:5; நாச்சினார் உரை,
21. மேலது:தொல் :புறத்:5,
22. நற்:பா;82,
23. பரி:19;95,
24. பரி:114:21-22,

### துணை நூற்பட்டியல்


1. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், பொருளதிகாரம்,
2. இளம்பூரணம், தொல்காப்பியம், பொருளதிகாரம், தமிழ்மண் பதிப்பகம்,
3. புலியூர் கேசிகன், சிலப்பதிகாரம் (மூலமும் உரையும்),
4. அ.மா.பாலசுப்பிரமணியன், ஐங்குறுநூறு மூலமும் உரையும்), நியூ.செஞ்சுரி புக் ஹவுஸ், பி,லிட், சென்னை,
5. அ.மா. பாலசுப்பிரமணியம், பத்துப்பாட்டு(மூலமும் உரையும்), தலைமை பதிப்பாசிரியர், நியூ, செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட். சென்னை,
6. முனைவர்.பே.சக்திவேல், தமிழர் தொன்மம் அன்றும் இன்றும், ச.மெய்யப்பன் பதிப்பகம், முதல் பதிப்பு: ஆகஸ்ட்:2013,
7. நா.சிலம்பு: செல்வராசு, வள்ளி முருகன் வழிபாடு மீட்டுருவாக்கம், (1992), காரனேஷன் பதிப்பகம், முத்தியால் பேட்டை, புதுச்சேரி,
8. நா.வானமாமலை, பழங்கதைகளும் பழமொழிகளும், (1987),நீயூ, செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட், சென்னை,
9. கா.சுப்பிரமணியன், சங்க கால சமுதாயம், (1987),நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி லிட் சென்னை,
10. தொ.பரமசிவம், தெய்வம் என்பதோர், (2006) யாதுமாகி 37.3 இராமசாமி, பாளையங் கோட்டை திருநெல்வேலி,
11. ஆறு.இராமநாதன், தமிழர் இலக்கய மரபுகள், (2007), மெய்யப்பன் பதிப்பகம், 53. புதுத்தெரு. சிதம்பரம்,
12. சிலம்பு.நா.செல்வராசு, தொல்தமிழர் சமயம்,
13. ஆறு.இராமநாதன், நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம், (2004), மெய்யப்பன் பதிப்பகம், 53.புதுத்தெரு. சிதம்பரம்,
14. ச.வே.சுப்பிரமணியன், மெய்யப்பன் அகராதி, முதல் பதிப்பு: டிசம்பர்:2006, மணிவாசகர் பதிப்பகம்,